முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இராணிப்பேடைமாவட்ட அலுவலகத்திலும் முத்துக்கடை பேருந்து நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள கலைஞர் படத்திற்கும் திருவுருவச் சிலைக்கும் மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் இராணிப்பேட்டைஆர்.காந்தி தலைமையில் வீரவணக்கம் செலுத்தப்பட்டது.இதில் மாநில சுற்றுச்சூழல் அணி துணை செயலாளர் ஆர்.விநோத்காந்தி மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி மாவட்ட துணை செயலாளர் குமுதா குமார் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. எல்.ஈஸ்வரப்பன் உள்பட நகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை -

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள நடவடிக்கை தேவை!

மக்களவையில் - டி.எம்.கதிர் ஆனந்த் கோரிக்கை!

புதுடெல்லி, ஆக. 8 –

ஆறுகள், நிலத்தடி நீர்த்தேக்கங்கள் சதுப்புநிலங்கள் உள்ளிட்ட அனைத்து நீர்வளங்களையும் ஒன்றோடொன்று தொடர்புடைய சுற்றுச்சூழல் அமைப்புகளாகக் கருதி ஒருங்கிணைந்த முறையில் நிர்வகிக்கும் அவசியம், நீர்வளப் பகிர்வில் நிலவும் சட்ட, நிர்வாக மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான சவால்கள், அறிவியல் அடிப்படையிலான நீர்வள திட்டமிடல், தரவுப் பகிர்வு, நிகழ்நேர கண்காணிப்பு, மக்கள் பங்கேற்பு மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நீண்டகால நீர் மேலாண்மை உத்திகள் குறித்து ஒன்றிய அரசின் நிலைப்பாட்டை விளக்குமாறு வேலூர் தொகுதி உறுப்பினர் டி. எம்.கதிர் ஆனந்த் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய ஜல் சக்தி அமைச்சகத்தின் இணை அமைச்சர் ராஜ் பூஷண் சௌத்ரி பதிலளிக்கையில், ஒன்றிய அரசு ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மைக்கு முக்கி யத்துவம் அளித்து வருவதாக தெரிவித்தார். தேசிய நீர்க் கொள்கை – 2012 (National Water Policy 2012) ஆற்றுப்படுகை

அடிப்படையிலான திட்டமிடல் மற்றும் Integrated Water Resources Management (IWRM) கொள்கைகளை வலியுறுத்துவதாகவும், நீர்வளங்களை நிலையான, சமமான மற்றும் திறமையான முறையில் பயன்படுத்துவதே அரசின் நோக்கமாக இருப்பதாகவும் கூறினார்.

மேலும், இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணை, மாநிலப் பட்டியல் (Entry 17) படி நீர் என்பது மாநில அரசுகளின் பொறுப்பாக இருந்தாலும், பல்வேறு நிறுவனங்களின் அதிகாரப் பிரிவு, மாநிலங்களின் நீர்ச் சட்டங்களில் உள்ள வேறுபாடுகள், மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தகராறுகள், நீர் சேமிப்பு மற்றும் விநியோக உள்கட்டமைப்பு பற்றாக்குறை, நகரமயமாக்கல் மற்றும் தொழில்மயமாக்கல் காரணமாக அதிகரித்து வரும் நீர் தேவை போன்ற சவால்களை ஒன்றிய அரசு பல்வேறு திட்டங்கள், நிதி உதவிகள் மற்றும் நிறுவன அமைப்புகள் மூலம் எதிர்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

அறிவியல் அடிப்படையிலான நீர்வள மேலாண்மைக்காக National Water Informatics Centre (NWIC) உருவாக்கப்பட்டு, IndiaWRIS மற்றும் Water Information Management System (WIMS) மூலம் ஒருங்கிணைந்த தரவுப் பகிர்வு மற்றும் நிகழ்நேர தகவல் சேகரிப்பு மேற்கொள்ளப்படுவதாகவும், நாடு முழுவதும் சுமார் 39,000 RealTime Data Acquisition System (RTDAS) நிலையங்கள் செயல்பட்டு வருவதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

மக்கள் பங்கேற்பை உறுதி செய்யும் வகையில், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள் (IIT), தேசிய தொழில்நுட்பக் கழகங்கள் (NIT), இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் (ICAR), அரசு சாரா அமைப்புகள் (NGO), குடிமக்கள் அமைப்புகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் Water User Associations (WUA) ஆகிய வற்றுடன் இணைந்து செயல்பட அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும், ஜல் ஜீவன் மிஷன், அடல் புஜல் யோஜனா, ஜல் சக்தி அபியான் – Catch the Rain உள்ளிட்ட திட்டங்கள் மூலம் மழைநீர் சேகரிப்பு, நீர் பாதுகாப்பு மற்றும் நீர் பயன்பாட்டு திறன் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாதுகாப்பான குடிநீர் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்வது, மழைநீர் சேகரிப்பை விரிவுபடுத்துவது, பாரம்பரிய நீர்நிலைகளை மீட்டெடுப்பது, நீர் மறுசுழற்சி, நுண்ணீர்ப்பாசனம், நிலத்தடி நீர் மேலாண்மை மற்றும் அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் திறன் கொண்ட, உள்ளடக்கிய மற்றும் நிலையான நீர் நிர்வாகத்தை உருவாக்குவதே மத்திய அரசின் நீண்ட கால நோக்கமாகும் என அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

தேனி மாவட்டம் – வருச நாடு – மேகமலை பகுதியில் பல தலைமுறைகளாக வசிக்கும்

மலைக் கிராம மக்கள் கண்டன ஆர்ப்பாட்டம்!

விவசாய நிலங்கள் – குடியிருப்புகளில் இருந்து வெளியேற்றப்படுவதற்கு எதிர்ப்பு!

தேனி, ஆக. 8 –

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வருச நாடு மற்றும் மேகமலை பகுதி கிராமங்களில் தலைமுறை தலைமுறையாக வசித்து வரும் மக்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றக் கூடாது என வலியுறுத்தி, நூற்று க்கணக்கான மலைக்கிராம மக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திரண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகப் பகுதியைக் காரணம் காட்டி, தங்களது விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புகளில் இருந்து வெளியேற வனத்துறை அழுத்தம் கொடுப்பதாக பொதுமக்கள் குற்றம் சாட்டினர்.

: வருசநாடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள 100க்கும் மேற்பட்ட

கிராமங்களில் பல்லாண்டுகளாக வசித்து வரும் தங்களை எந்த காரணத்தை கொண்டும் அப்புறப்படுத்தக் கூடாது.

வன உரிமைச் சட்டப்படி பட்டா: பாரம்பரியமாக சாகுபடி செய்து வரும் நிலங்களுக்கு உடனடியாக பட்டா வழங்க வேண்டும்.

அடிப்படை வசதிகள் வனப்பகுதி எனக் கூறி சாலை சீரமைப்பு, மின்சாரம் மற்றும் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய பணிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை திரும்பப் பெற வேண்டும்.

வாழ்வாதார பாதுகாப்பு விவசாயம் மற்றும் ஆடு, மாடு மேய்ப்பதையே வாழ்வாதாரமாக கொண்டுள்ள தங்களை அப்புறப்படுத்தினால் வாழ்வாதாரம் முற்றிலும் முடங்கும் என அச்சம் தெரிவித்தனர்.

முடிவில் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுவை அனைத்து கட்சி சார்பாக மாவட்ட ஆட்சியரிடம் அளித்தனர்.

பாரம்பரிய நில உரிமைகளை பாதுகாத்து, வாழ்விடத்தை விட்டு வெளியேற்றும் நடவடிக்கையை கைவிடாவிட்டால், ஆண்டிபட்டி தொகுதி முழுவதிலும் உள்ள மக்களை திரட்டி தொடர் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக போராட்டக் குழுவினர் எச்சரித்தனர்.

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்!

மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் புகழஞ்சலி!

நெல்லை., ஆக. 8 –

நெல்லை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ம் ஆண்டு நினைவு நாள் மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெறுகிறது.மாவட்டம் முழுவதும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலர்தூவி புகழஞ்சலி செலுத்துவீர்.என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பான அவரது வேண்டுகோள் அறிக்கை வருமாறு.

நெஞ்சம் நிறைந்து வாழும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் இன்று 7ஆம் தேதி ஆகும்.தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகவும் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காகவும் தான் ஆட்சி செய்த போதெல்லாம் நாளும் பல நல்ல திட்டங்களை சமுதாயத்தில் அடித்தட்டு மக்களுக்கு தந்தவர் நம் நெஞ்சம் நிறைந்த முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.தன்னுடைய எழுத்துக்களாலும் ஆட்சி காலத்தில் செய்த நலதிட்டங்கள் மூலமாகவும் இன்றும் தமிழக மக்களின் நெஞ்சில் குடி கொண்டுள்ளார்கள்.வரலாறுகளை படைப்பதில் நாயகராக இருந்து இந்திய வரலாற்றில் ஒட்டுமொத்த இந்திய தலைவர்களும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை சந்திக்க கோபாலபு ரம் இல்லம் வந்தார்கள்.

இவ்வாறு அனைத்து தரப்பினரின் அன்பை பெற்ற நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நம்மையெல்லாம் மீளா துயரத்தில் ஆழ்த்தி விட்டு பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு அருகில் துயில் கொள்ள சென்றுவிட்டார்கள்.வாழும் போது போராட்டகளம் கண்டதுபோல் தான் மறைந்த போதும் சட்டப் போராட்ட களம் கண்டார்.தமிழினத்தை காப்பதற்காக தனக்குப் பின்னால் நம் கழகத் தலைவர் அன்புதளபதியார் அவர்களை நமக்கு வழிகாட்டியாகவும், பாதுகாவலராகவும் சுட்டிக்காட்டி சென்றுள்ளார்.

கழகத்தலைவர் அவர்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களைப் போல் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக நாளும் உழைத்து வருகிறார்.

நம் கழகத்தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவை போற்றும் வகையில் திருநெல்வேலி மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் மாவட்ட கழக பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் புகழஞ்சலி நடைபெறும் இடம்,நேரம் வருமாறு.

1.07082026 காலை 9.00 மணி

விக்கிரமசிங்கபுரம்.

2.07.08.2026 காலை 9.30 மணி, சிவந்திபுரம்.

3.07.08.2026 காலை 10 00மணி அம்பாசமுத்திரம் நகரம்.

4.07082026 காலை 1030 மணி ஆலங்குளம் பேரூர்,ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி புகழஞ்சலி செலுத்தப்படும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

அதுபோன்று திருநெல்வேலி மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றியநகர, பேரூர் கிளை,வார்டு கழக பகுதிகளில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் திருஉருவப் படத்தை மலர்களால் அலங்கரித்து மலர்தூவியும் புகழஞ்சலி செலுத்த வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

ஆங்காங்கே நடைபெறும் புகழஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகளில் அந்தந்த பகுதிகளில் உள்ள மாவட்ட, மாநில கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர, பேரூர் கிளை, வார்டு, செயலாளர்கள் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், நகர்புற, ஊரக உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சார்பு அணிகளுடைய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர் கள் கழகத் தோழர்கள் உள்பட அனைவரும் தவறாது புகழஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் கலந்துகொண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் நினைவை போற்ற வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் அறிக்கையில் கூறியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞரின் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்

தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

முன்னாள் அமைச்சர் கீதா ஜீவன் – ஜெகன் பெரியசாமி தலைமையில் கழகத்தினர் பேரணி!

தூத்துக்குடி, ஆக. 8 –

தி.மு.க. முன்னாள் தலைவரும் முன்னாள் முதலமை ச்சருமான கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற அமைதி ஊர்வலத்திற்கு வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் தலைமையில் மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் முன்னிலையில் அண்ணா நகரிலிருந்து புறப்பட்டு அலங்கரிக்கப்பட்ட கலைஞர் உருவப் படத்துடன் அமைதி ஊர்வலம் நான்காம் கேட் புதிய பேருந்து நிலையம் வழியாக எட்டையாபுரம் சாலையில் வடக்கு மாவட்ட திமுக அலுவலகத்தை சென்றடைந்து அங்குள்ள கலைஞர் சிலைக்கும் அலங்கரிக்கப்பட்ட படத்திற்கும் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கீதாஜீவன் மேயர் ஜெகன் பெரியசாமி மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், பொருளாளர் ரவீந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச்செயலாளர் அன்பழகன், மாநகராட்சி மண்டல தலைவர்கள் வக்கீல் பாலகுருசுவாமி, கலைச்செல்வி, மாநகர துணைச் செயலாளர்கள் கீதாமுருகேசன், கனகராஜ், பொருளாளர் அனந்தையா, பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார், சுரேஷ்குமார், ரவீந்திரன், ராமகிருஷ்ணன், மேகநாதன், மாவட்ட அணி நிர்வாகிகள் அந்தோணிஸ்டாலின், கவிதா தேவி, பிரபு, அந்தோணி கண்ணன், நாகராஜன், அருணா தேவி, நிக்கோலாஸ் மணி, தங்கம், ராமர், அருண்குமார், பழனி, நிக்கோலாஸ் மணி, ஜான்சன், செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் கஸ்தூரிதங்கம், கோட்டு ராஜா, மாவட்ட பிரதிநிதி கள் சக்திவேல், நாராயணன், சேர்மபாண்டி, செல்வகுமார், ராஜ்குமார், மீனாட்சி சுந்தரம், மாநில பேச்சாளர் சரத்பாலா, மாநகர அணி நிர்வாகிகள் ஜீவன்ஜேக்கப், ஆனந்தசேகர், முருகஇசக்கி, சாரதி, பால்ராஜ், டைகர் வினோத், செல்வின், பால்ராஜ், மகேஸ்வரன்சிங், வினோத், நைஸ் பரமசிவம், சாகுல்ஹமீது, பிக் அப் தனபால், நாராயணவடிவு, சக்திவேல், செந்தில்குமார், ரவி, இந்திரா, வினோத், சத்யா, கருப்பசாமி, செய்யதுகாசிம், பெல்லா, கவுன்சிலர்கள் சந்திரபோஸ், ரெக்ஸின், பவானி ஜெயசீலி, அந்தோணி பிரகாஷ்மார்ஷல், பொன்னப்பன். விஜயகுமார். சரவணக்குமார், வைதேகி, இசக்கி ராஜா, ஜான்சிராணி, தெய்வேந்திரன், கந்தசாமி, ஜான், நாகேஸ்வரி, கண்ணன், பேபி ஏஞ்சலின், பாப்பாத்தி, மரியகீதா, வக்கீல்கள் மோகன்தாஸ் சாமுவேல், ஆனந்த கபரியேல்ராஜ்,

நாகராஜன் பாபு, ரூபராஜா, தொமுச நிர்வாகிகள் முருகன், கருப்பசாமி, பெத்துராஜ், வேல்முருகன், பகுதி பொருளாளர் முத்துராஜா, வட்டச்செயலாளர்கள் பாலகுருசாமி, கதிரேசன், ராஜாமணி, சுப்பையா, முனியசாமி, ரவீந்திரன், செல்வராஜ், மூக்கையா, சதீஷ்குமார், பொன்ராஜ், கருப்பசாமி, சுரேஷ், செந்தில்குமார், சிங்க ராஜ், டென்சிங், பொன்னுச்சாமி, பத்மாவதி, பொன்பெருமாள். சேகர், சக்கரைசாமி, பகுதி அணி அமைப்பாளர்கள் காசிராஜன், ஆனந்தி, செல்வம், முன்னாள் கவுன்சிலர்கள் பாலு,

இசக்கிமுத்து, பெரியசாமி, பிச்சையா, செந்தில்குமார், முருகன், பகுதி பிரதிநிதிகள் பிரபாகர், செந்தில்குமார், லிங்கராஜா, வட்டப்பிரதிநிதிகள் அருணகிரி, பாஸ்கர், புஷ்பராஜ், செல்வம், பால்துரை, கார்த்திகேயன், மற்றும் முரளி தரன், நாராயணன், சின்னக் காளை, சிவசுந்தர், மணி, உள்பட பலர் கலந்து கொண்டனர். சட்டமன்ற தொகுதி முழுவதும் உள்ள அனைத்து வார்டு பகுதிகளிலும் அலங்கரிக்கபட்ட கலைஞர் படம் வைக்கப்பட்டு திமுகவினர் மலர் தூவி மரியாதை செய்தனர்.

தென்காசி முதல் தாம்பரம் வரை

விரைவில் புதிய வந்தே பாரத் ரயில் சேவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள்!

மக்களவையில் தென்காசி எம்.பி. ராணி ஸ்ரீ குமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக. 8 -

டெல்லி நாடாளுமன்ற கூட்ட தொடரில் (06.08.2026) அன்று ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வின் வைஷ்ணவ் நேரில் சந்தித்து தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் பொதுமக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தர வலியுறுத்தி மனு கொடுத்துள்ளார்.

அந்த மனுவில் அவர் கூறியிருப்பதாவது.

பெங்களூர் முதல் மதுரை வரை செல்லும் கண்டோன்மெண்ட் வந்தே பாரத் இரயிலை (20671/20672) தென்காசி வரை நீட்டிக்க வேண்டி.

தாம்பரம் முதல் மதுரை வரை செல்லும் தேஜஸ் விரைவு இரயிலை (22671/22672) இராஜபாளையம் வரை நீட்டிக்க வேண்டி.

கோயம்புத்தூர் முதல் மதுரை வரை செல்லும் இரயிலை (16721/16722) செங்கோட்டை வரை நீட்டிக்க வேண்டி.

செங்கோட்டை முதல் தாம்பரம் வரை சிலம்பு விரைவு இரயிலை (20681/20682) LHB பெட்டியுடன் தினசரி இயக்க வேண்டி.

கொல்லம் முதல் தாம்பரம் செல்லும் கொல்லம் விரைவு இரயிலில் (16101/16102) மூன்று முன்பதிவற்ற பெட்டிகளை இணைக்க வேண்டி.

தென்காசி முதல் தாம்பரம் வரை விரைவில் புதிய வந்தே பாரத் இரயில் சேவையை தொடங்க வேண்டி.

சங்கரன்கோவில் ரயில் நிலையத்தை அம்ரித் பாரத் ரயில் நிலையத்திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பு செய்ய வேண்டி.இச்சந்திப்பின்போது, தென்காசி நாடாளுமன்ற தொகுதி ஒரு முக்கியமான சுற்றுலா, கல்வி, வணிக மற்றும் விவசாயம் நிறைந்த பகுதியாக உள்ளதாலும், மேலும் ஏழை எளிய பொதுமக்கள், வணிகர்கள், விவசாய பெருமக்கள் மாணவ மாணவியர்கள் வேலை வாய்ப்பிற்கா வும், மருத்துவம் உள்ளிட பிற அத்தாவசிய தேவைக்காக மதுரை, சென்னை, கோயம்புத்தூர், பெங்களூர் உள்ளிட்ட பிற முக்கிய நகரங்களுக்கு தொடர்ந்து பயணம் மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேறும் பட்சத்தில் சுற்றுலா மேம்படுதல், குறைந்த கட்டண போக்குவரத்து வசதியில் பொதுமக்கள் பயன்பெறுதல், மற்றும் வர்த்தக வசதி மேம்படும் இதன்மூலம் இப்பகுதியின் ஒட்டுமொத்த சமூக பொருளாதரம் மேம்படும், ஆகவே மேற்கண்ட கோரிக்கைகளை விரைந்து பரிசீலனை செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளார்.அதற்கு ஒன்றிய அமைச்சர் அவர்களும் கோரிக்கைகளை அனைத்தும் உடனடியாக பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்துள்ளார்.

மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் தலைமையில்

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி!

கன்னியாகுமரி, ஆக. 8 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் தலைமையில் அமைதி பேரணி தொடங்கி ஒழுகினசேரி, மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்திலுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், முன்னாள் முதலமைச்சர், முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 07.08.2026, வெள்ளிக்கிழமை அன்று காலை 9.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் தலைமையில் அமைதி பேரணி நாகர்கோவில், வடசேரி அறிஞர் அண்ணா சிலை அருகில் இருந்து தொடங்கி அறிஞர் அண்ணா விளையாட்டு அரங்கம், மணிமேடை சந்திப்பு, எஸ்.பி. அலுவலக சாலை, கட்டபொம்மன் சந்திப்பு, அவ்வை சண்முகம் சாலை வழியாக நாகர்கோவில், ஒழுகினசேரி தலைமைக் கழக அலுவலகம் வந்தடைந்து முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் அவர்களின் முழு திருவுருவ வெண்கலச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

பேரணியில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், தணிக்கை குழு உறுப்பினர் என்.சுரேஷ்ராஜன், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட பொருளாளர் ஐ.கேட்சன், துணை செயலாளர்கள் ஏ.ஆர்.பூதலிங்கம் பிள்ளை, கரோலின் ஆலிவர்தாஸ் உட்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் என ஆயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு அனைவரும் மரியாதை செலுத்தினர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நெல்லை மாநகர மேற்கு தி.மு.க.சார்பில் மேற்கு மாநகர அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருஉருவப்படத்திற்கு நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் கோபி தலைமையில் கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்ற பெற்ற நிகழ்வில் நெல்லை மேற்கு மாநகர பொறுப்பாளர் சு. சுப்பிரமணியன் பங்கேற்று மாலை அணிவித்து மலர் தூவி புகழஞ்சலி செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.